# குறளில் குடும்ப மேலாண்மை

**இரா.சசிகுமார் [1] & முனைவர் கி.ஜா.பிரிசில்லா [2]**

**[1] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை,**

**பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி**

**https://orcid.org/0009-0007-9503-691X**

**[2]இணைப்பேராசிரியர், தமிழியல்துறை,**

**ஏ.டி.எம்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி) , நாகப்பட்டினம்**

**https://orcid.org/ 0009-0005-2690-917X**

3

**ஆய்வுச் சுருக்கம்:**

திருக்குறள் என்பது வாழ்க்கையின் அனைத்து பரிமாணங்களையும் பேசும் நெறி வழிகாட்டும் நூலாகும். அதிலும் குடும்ப மேலாண்மையை ஒழுங்குபடுத்தும் முக்கியமான கூறாக இந்நூல் விளங்குகிறது. மனிதன் தன் வாழ்நாளில் தன்நிறைவுடன் வாழ்வதற்கு ஏற்ற கருத்துக்களை இக்கட்டுரை வழி ஆய்வதுடன் சில கடைமைகளையும் ஆற்றவே படைக்கப்பட்டுள்ளான். நிலையில்லாத வாழ்வில் நிலையான செல்வம் அன்புடைமை, ஒழுக்கமுடைமை, அறன்வலியுறுத்தல், இனியவைகூறல், செய்நன்றியறிதல், பொறையுடைமை, சான்றான்மை, இல்லறவாழ்வியல், வாழ்க்கைத்துணைநலம், மக்கட்பேறு, போன்ற தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:**

அன்புடைமை, ஒழுக்கமுடைமை, அறன் வலியுறுத்தல், இனியவைகூறல், பொறையுடைமை, சான்றாண்மை, இல்லறவாழ்வியல், வாழ்க்கைத்துணைநலம், மக்கட்பேறு, ,செய்நன்றியறிதல்.

**முன்னுரை:**

மனித வாழ்க்கையின் அடிப்படை அலகாகக் குடும்பம் திகழ்கிறது. குடும்பம் செம்மையாக இயங்கினால் சமூகமும் ஒழுங்குடன் வளரும். குடும்ப வாழ்வின் ஒழுக்கம், பொறுப்பு, அன்பு, அறம் ஆகியவற்றை வழிகாட்டும் சிறந்த வாழ்வியல் நூலாக திருக்குறள் விளங்குகிறது. திருவள்ளுவர் இல்லறத்தை உயர்ந்த அறமாகக் கருதி, குடும்ப மேலாண்மைக்கு தேவையான நெறிமுறைகளை குறள்களினூடாக எடுத்துரைக்கிறார். உறவுகளின் மதிப்பு அன்பும், ஒருங்கிணைப்பும் குடும்பத்தில் முக்கியமென

வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் குடும்பத்தின் உள்ளே துவங்கும் உணர்ச்சிகள், அன்பு, நெஞ்சின் ஆழத்திலிருந்து வரும் ஒற்றுமை மூலம் உறவுகளை நீடிக்கச் செய்யும் என்கிறார் அவர்.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரின் பங்களிப்பும், அன்பும், மரியாதையும், மதிப்பும், குடும்ப வளமை மற்றும் ஆரோக்கியம் பெறுவதற்கு அவசியம் என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது.. மேலும் குடும்ப வாழ்க்கையின் அத்தியாவசிய அம்சங்களை, உறவுகளின் முக்கியத்துவத்தை, குடும்ப மேலாண்மைக்கு தொடர்பான சில முக்கிய கருத்துக்களை குறள்கள் வலியுறுத்துகின்றன.

**அன்புடைமை:**

மனித வாழ்வின் வெற்றிக்கு அடிப்படை காரணமாக அன்பு உள்ளது. அன்பினை அனைவரிடமும் காட்ட வேண்டிய ஒன்று, அன்பு என்று வெள்ளத்தை எந்த தாப்பாள் போட்டு தடுத்து நிறுத்த முடியாது, உலகில் மக்கள் இன்பத்தோடு சிறப்பாக வாழ்வதற்கு காரணம் அன்பு ஆகும். இவ்வுலகில் மனிதர்கள் அனைவரும் அன்போடு வாழ்ந்தால் அவர்கள் அனைவரும் அனைத்து வகையான செல்வங்களை பெற்று மகிழ்ச்சியுடன் வாழ முடியும்.

ஒரு குடும்பத்தில் தலைவன் அறத்திற்க்கும், மனைவி அன்பிற்கும், இலக்கணமாக செயல்படுகின்றனர். உணவு, உடை, உறைவிடம், ஆகியன குடும்ப வாழ்வை செம்மையாக வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளாக உள்ளன.. இவை அனைத்தையும் ஒருங்கே அமைத்துக் கொள்ள ஒரு மாளிகை தேவை, அந்த மாளிகை தான் குடும்பம். குடும்பத்தைப் பற்றிப் புறநானூறும் கூறுகிறது.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்" (குறள் 71)

என்ற குறட்பா அன்பின் வெளிப்பாடினை

உணர்த்துகிறது.உலகத்தில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்பு காணப்படுகிறது. அன்பானது ஒரு மனிதனை மற்ற மனிதர்களோடு இச்சமுதாயத்தில் சேர்ந்து வாழ வழிவகைச்செய்கிறது. உடலுக்கும் உயிருக்கும் அன்பே நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது.

**ஒழுக்கமுடைமை:**

மனித வாழ்வின் உயர்வையும், சமூகத்தின் ஒழுங்கையும், நிலைநிறுத்தும் அடிப்படைத் தூண் ஒழுக்கமாகும். ”ஒழுக்கமுடைமை” என்பது மனிதன் தனது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் அறநெறியைப் பின்பற்றி வாழும் பண்பாகும். தமிழ்ச் செவ்விலக்கியங்களும், அறநூல்களும், ஒழுக்கத்தை மனித வாழ்வின் முதன்மைத் தகுதியாகக் கூறுகின்றன. ஒழுக்கமின்றி அறிவும் செல்வமும் பயனற்றதாகிவிடும் என்ற கருத்தை இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

மனிதனின் தனிப்பட்ட வாழ்விலும் சமூக உறவுகளிலும் ஒழுக்கம் அவசியமான ஒன்றாகும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்" (குறள் – 131)

'ஒழுக்கம்' மனிதனுக்குப் பெருமையையும், மதிப்பையும், அளிப்பதால், உயிரை விடவும் மேலாகக் காக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது. ஒழுக்கம் உள்ளவருக்கே சமூகத்தில் மரியாதையும் நம்பிக்கையும் நிலைத்து நிற்கும்.

ஒழுக்கமுடைய மனிதன் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், நன்மை பயப்பவனாக இருப்பான். நேர்மை, பணிவு, பொறுமை, பிறரை மதித்தல், போன்ற பண்புகள் ஒழுக்கத்தின் வெளிப்பாடாக உள்ளன. ஒழுக்கம் சமூகத்தில் ஒற்றுமையையும் அமைதியையும் வளர்க்கிறது.

ஒழுக்கமுடைமை மனித வாழ்வின் அடிப்படை அறமாகும். தமிழிலக்கியங்கள் ஒழுக்கத்தை மனிதனின் உயர்வுக்கான முதன்மை வழியாகக் காட்டுகின்றன. ஒழுக்கம் உள்ள இடத்தில் நன்மையும், அமைதியும் நிலவும். ஆகவே ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் காத்து வாழ வேண்டும். அதுவே தனிநபர் வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமையும்.

**அறன் வலியுறுத்தல்**;

மனதால் நேர்மையுடன் இருப்பதே அறம். அப்படி அறமுடன் இருப்பவர்க்கு செல்வமும், சிறப்பும் வளரும். அறத்தை மறுப்பவர் வாழ்வில் வீழ்ச்சியடைவர்.. அழிக்கும் குணம், அளவற்ற ஆசை, கடும் கோபம், வன்சொல் இவை நான்கும் இல்லாமல் இருப்பதே அறமாகும்.. அடுத்தவர் மதிக்கப்பட வேண்டும் என்று கருதி அறத்தை செய்யாமல், பிறருக்கு அடிமையாக இருப்பது அறமாகாது. அறமே இன்பத்தைத் தரும்.

"சிறப்புஈனும் செல்வமும்ஈனும் அறத்தினூ உங்கு

ஆக்கம் எவனோ உயிர்க்கு" (குறள் 31)

அறமானது ஒருவனுக்கு சிறப்பையும் செல்வத்தையும் தரும்; எனவே உயிர்களுக்கு அதைவிடச் சிறந்த ஆக்கம் வேறு எதுவும் இல்லை என்பதாகும். அறத்தின் பயன்களை விளக்கும் "ஆக்கம்" என்ற சொல்லின் பொருளை அறிவது முக்கியம்.

**இனியவை கூறல்:**

வாழ்க்கையில் நல்லவற்றை அறிந்தவர் சொல்லும் வார்த்தைகளில் உண்மை இருக்கும். கண்களை கசிந்துருகச் செய்யும். கொடுப்பதைக் காட்டிலும் இனிமையான சொற்களைப் பேசுதல் சிறந்தது. இனிமையான சொற்கள்தான் நன்மையைத் தரும். இன்முகத்துடன் பேசும் சொற்களில்தான் பயன் அதிகமாக இருக்கும்.

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்

செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" (குறள் 92)

உண்மையை உணர்ந்தவர்களின் வாய்ச்சொல் எந்த அளவுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்குமோ, அதுபோல் நல்ல இனிமையான வார்த்தைகள் மனத்தில் இன்பத்தையும், நெஞ்சில் ஈரத்தையும் கசிந்துருகச் செய்துவிடும். ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும், இருப்பின் அதுவே இன்சொல்லாக கருதப்படும்..

முகம் மலர நோக்கி, அகம் மலர இனிய சொற்களைக் கூறுவதே அறவழியில் அமைந்த பண்பாகும்.நன்மையான பயனைத் தரக்கூடிய நல்ல பண்பிலிருந்து விலகாத சொற்கள் அவற்றைக் கூறுவோருக்கும், இன்பத்தையும், நன்மையையும் உண்டாக்கக் கூடியவையாக உள்ளன.

**செய்நன்றியறிதல்:**

செய்ந்நன்றி (Gratitude) என்பது நமக்கு உதவி செய்தவர்களை மறக்காமல் அவர்களுக்குப் பெரிதும் நன்றி உடையவர்களாக இருக்கும் உணர்வு அல்லது மனப்பாங்கு ஆகும். மற்றவர்களின் மீது அன்பு செலுத்துகின்ற பண்பும், மற்றவர்களை மதித்து நடக்கின்ற தன்மையும் ஒருவரை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் என்று உறுதியாக கூறுகிறார் வள்ளுவர்.

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது" (குறள் 101)

வள்ளுவப் பெருந்தகையும் நன்றி மறப்பது நன்றன்று என்கிறார். நன்றியுணர்வோடு செயல்படும் போதுதான் நமது மனம் பக்குவப்பட்ட நிலையில் பணிவோடும், தெளிவோடும், இருக்கின்றது என்பர்தை வலியுறுத்துகிறார்.

உதவி என்பது உதவியின் தன்மையை பொறுத்து அல்ல, உதவி பெற்றவரின் தன்மையைப் பொறுத்தது ஆகும். பிறர் செய்த நன்மையை மறவாது உணர்ந்திருப்பது செய்ந்நன்றியறிதல் ஆகும். செய்யாமல் செய்த உதவி, காலத்தினால் செய்த உதவி, பயன் தூக்கார் செய்தார் உதவி என்றிவை நன்றி உணர்தலில் அளவிட்டு அறியமுடியாத மிக உயர்ந்த நிலையில் வைத்துப் பேசப்படுகின்றது. ஒருவர்க்கொருவர் உதவி செய்வதாலேயே உலகம் இயங்குகிறது. நன்றி என்ற சொல் இன்று நன்றியை மறவாது இருப்பது பற்றியதே.

**பொறையுடைமை:**

மனித வாழ்வின் உயரிய பண்புகளில் முக்கியமானது 'பொறையுடமை' ஆகும். பிறர் செய்யும் குற்றம், அவமதிப்பு, துன்பம் போன்றவற்றை மனத்தில் சினமின்றி தாங்கிக் கொள்வதே பொறையுடமை. தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் அமைதி, ஒற்றுமை நிலவுவதற்கு இந்த அறப்பண்பு அடிப்படையாக அமைகிறது. தமிழ்ச் சிந்தனையும்

இலக்கிய மரபும் பொறையுடைமையை உயர்ந்த மனித குணமாக வலியுறுத்துகின்றன.

பொறை' என்றால் தாங்குதல்; 'உடமை' என்றால் உடைய தன்மை. ஆகவே, துன்பம், இழிவு, பழி போன்றவற்றை மன உறுதியுடன் ஏற்றுக் கொள்வதே பொறையுடமை. இது பலவீனத்தின் அடையாளமல்ல; மாறாக மனவலிமையின் வெளிப்பாடாகும்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை." (குறள் 151)

என்று கூறி, தன்னை இகழ்வோரையும் பொறுக்கும் மனப்பாங்கே உயர்ந்த நிலை என விளக்குகிறார். திருவள்ளுவர். நிலம் தன்னை அகழ்வோரையும் தாங்குவது போல, மனிதனும் அவமதிப்பைச் சகிக்க வேண்டும் என்ற உவமை இங்கு சிறப்பாகப் கட்டப்படுகிறது..

நாலடியார், இனியவை நாற்பது, ஆசாரக்கோவை போன்ற நூல்களும் பொறுமையை உயர்ந்த நெறியாகக் கூறுகின்றன. நாலடியார், கோபத்தை அடக்கி பொறுமை காத்தல், மனிதனை உயர்த்தும் என எடுத்துரைக்கிறது. இவ்விலக்கியங்களில் 'பொறையுடமை' தனிமனித நலத்தோடு சமூக அமைதிக்கும் அடிப்படையாகக் காட்டப்படுகிறது. பொறையுடமை மனிதனை மனிதனாக்கும் உயரிய அறக்குணமாகும். அது தனிமனித ஒழுக்கத்தை வளர்க்கிறது; சமூக அமைதியை நிலைநிறுத்துகிறது. தமிழ் அற இலக்கியங்கள் கூறும் பொறையுடமை நெறியை இன்றைய வாழ்விலும் நடைமுறைப்படுத்தினால், மனித வாழ்வு சிறப்புறும் என்பதில் ஐயமில்லை.

**சான்றான்மை;**

சான்றான்மைக்கு தமிழகம் தந்த பெருமை மிகப் பெரியதாகும். அதன் திரண்ட கருத்து எல்லாம் ஒன்றே ஒன்று. அது மக்களாய் பிறந்தவர்கள் அனைவரும் மக்கட் பண்போடு வாழ வேண்டும் என்பது. அத்தகைய பண்புகளில் ஒன்றே சான்றாண்மை.

**"தோல் வற்றி சாயினு  சான்றாண்மை குன்றாதே"** என்பது அறிஞர் நல்லாதனார் கொடுத்த அடி. **"நல்ல மகனாய் பிறந்தும் சும்மா திரியாதே; சான்றோர் என திரி"** என்பது அவ்வையின் வாக்கு." ஆண்டு பலவாகியும் என் தலையில் ஏன் நறையில்லை தெரியுமா? நான் வாழும் ஊரில் சான்றோர் பலர் வாழ்கின்றனர்" என்பது புறநானூறு காட்டும் புதுமை. பெருமையில் அடங்காதவை பல **சான்றாண்மை**யில் அடங்கியிருக்கின்றன

பிற நூல்களைக் காட்டிலும் திருக்குறளில் சான்றான்மைக்கு உயர்ந்த இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் "முழு மனிதன் நூறாண்டு வாழ்வான்: முழு மனிதன்

பண்போடு வாழ்வான்" என்று கூறி சான்றாமையை நிலைநிறுத்துகிறது.

சான்றோரை நமக்கு காட்டுவது அவரது குண நலனே. பிற நலன்கள் அல்ல. கல்வி, கேள்வி, செல்வம், அழகு, வண்டி, வாகனம், ஆடை, அணிகலன், பட்டம், பதவி, முதலிய நலன்களை எல்லாம் அடக்கி, அதன் மேல் உயர்ந்து நிற்பது குணநலன் ஒன்றே என்று எடுத்துக்காட்டுகிறது. குணநலன் இன்றேல், ஒருவன் சான்றோன் ஆகான். அவன் அடைந்த பிறர் நலன்களால் அவனுக்கு சிறப்பு சிறிதும் இல்லை.

சான்றாண்மைக்கு பல நற்குணங்கள் வேண்டும். அவை எல்லோரிடத்தும் அன்பாயிரத்தல், பழிப்பாவங்களுக்கு அஞ்சி வாழ்தல், எவரையும் உற்ற உறவாய் கொள்ளுதல், இயன்றவரை எளியவருக்கு உதவுதல், எப்போதும் உண்மையே பேசி மகிழ்தல் என்பன. இவை ஐந்தையும் தூண்களாக நிறுத்தி, மேலே சால்வை பரப்பி வள்ளுவர் கட்டிதந்த கட்டிடமே மக்கள் வாழ்வதற்கு ஏற்ற சான்றாண்மை கட்டிடமாகும்.

**இல்லற வாழ்வியல்:**

இல்லறம் (குடும்ப வாழ்க்கை) மனித வாழ்வின் அடித்தளமாகக் கருதப்படுகிறது. வீரத்தையும் காதலையும் மையமாகக் கொண்டு பழந்தமிழ் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இல்லத்தில் நிகழும் காதல் சார்ந்த உணர்வுகளை அகமென்றும், இல்லத்திற்கு வெளியே நீங்களும் கொடை, நட்பு, போர் ஆகியவற்றை புறம் என்று கொண்டனர். இலக்கியங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன. இல்லற வாழ்வியல் முறையை பற்றி ஆராய்வதாக அமைந்துள்ளன.

"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்வாயின் நன்று"(குறள் 46)

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பவன்
முயல்வாருள் எல்லாம் தலை" (குறள் 47)

மேற்கண்ட குறட்பா மூலம் தமிழர்கள் அறத்தோடு பொருந்திய இல் வாழ்வினை மேற்கொண்டனர் என அறிய முடிகிறது. திருமண வாழ்வை இல்லறம் என்றனர். இல்லறம் = இல்+அறம் என்ற சொல்லானது இல்லத்திலிருந்து அறவாழ்க்கை வாழ்வதைக் குறிக்கிறது. இல்லற வாழ்வின் குறிக்கோள் அறம், பொருள், இன்பம், மூன்றும் கொண்டதாகும். இல்வாழ்க்கையில் ஈடுபடுபவர் அறத்தோடு பொருந்திய இன்பத்தை பெற இம்மூன்றையும் அவசியம் மேற்கொள்ள வேண்டும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள் 45)

மகிழ்ச்சி மிகுந்த இனிய சொற்களாலும், அன்பினாலும், இனிய

உறுப்பினர்களையும், சொந்தங்களையும், இணைக்கும் பாலமாக பெண்ணின் அன்பினை போற்றுகிறார் வள்ளுவர். இல்லற உறுப்பினர்களின் அன்பு ஒழுக்கமாக இருப்பின், 'இல்லறம் நல்லறமாக அமையும்' என்பதை வள்ளுவர் நமக்கு எடுத்துரைக்கிறார்.

**வாழ்க்கைத் துணைநலம்:**

ஒவ்வொரு பெரிய மனிதனின் வாழ்க்கையின் பின்னாலும் அந்தப் பெரிய மனிதனை உருவாக்கிய பெண் இருப்பாள் என்பது ஒர் அனுபவவாக்கு. வாழ்தலே எல்லாவற்றிலும் சிறந்தது. வீட்டுக்குத் தேவையானதை சிறப்புற செய்பவளை தனதாக்கிக் கொண்டவன், வளம் பல காணும் வாழ்க்கைத் துணையை அடைந்தவன் ஆவான்.

பொறுத்தாற்றும் பண்பு தேவை. குறை, குணங்களைக் கடந்து அன்பு பாராட்டும் இணையாள் அமையவேண்டும். துணையாக இருக்கும் எதிர்பாலினம் சிறப்பாக அமைந்துவிட்டால், வளம் பல கிடைத்துவிடும். எனவே, பெற வேண்டியது நல்ல துணையே. அதுவே மங்களம் ஆகும்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை". (குறள் 45)

உணவளிப்பதிலும் தாயாகவும், தக்க ஆலோசனைகள் கூறி வழிநடத்துவதில் தமக்கையாகவும், குறை குணங்களைக் கடந்த நிலையில் அன்பு பாராட்டி எடுக்கும் காரியம் யாவினும் கை கொடுத்து நிற்பதால் தோழியாகவும், உடல் நலம் கருதிப் பேணுவதில் மருத்துவச்சியாகவும் காதலின்பத்தை அளிப்பதில் மனைவியாகவும், இடையூறு உண்டான நேரத்தில் தக்க நெறிமுறைகள் காட்டுவதில் அமைச்சராகவும் விளங்கவேண்டும் என்று ஆன்றோர் கூறுவர்.

**மக்கட்பேறு:**

பெறுமவற்றுள் பெரும்பேறு புறநானூற்றில், பொன்முடியார் என்ற பெண்பாற் புலவர், "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே" என்று கூறுகிறார். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போருக்குப் போகும் பொழுது, பகைவருடைய நாட்டில் உள்ளவர்களில் பிள்ளைகள் இல்லாதவர்களை நோக்கி, "நீங்கள் பாதுகாவலான இடத்திற்குச் செல்லுங்கள்.", என்று கூறியதாகப் புறநானூற்றில், நெட்டிமையார் என்ற புலவர் குறிப்பிடுகிறார்.

பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின் . . .

(நெட்டிமையார், புறநானூறு, 9, 4-5)

நன்மக்களைப் பெறுவது பெரும்பேறு என்பதையும், அதனால் அந்த நன்மக்களின் பெற்றோர் அடையும் நன்மைகளையும் "மக்கட்பேறு" என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறார். ஒருவன் தன்னுடைய வாழ்க்கையில் மிகுந்த

செல்வத்தைப் பெறலாம்; உயர்ந்த பதவிகளை அடையலாம்; வேறு சிறப்புக்களையும் பெறலாம். ஆனால் வள்ளுவரைப் பொறுத்தவரை, ஒருவன் பெறக்கூடிய பேறுகளில் எல்லாம், அறிய வேண்டியவற்றை அறிந்தவர்களாக அவனுடய மக்கள் இருப்பார்களானால், அதுவே மிகச் சிறந்த பேறு. இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதற்காக, வள்ளுவர் தான் அறிந்த பேறுகளில் எல்லாம், அறிய வேண்டியதை அறிந்த மக்கள்தான் ஒருவன் பெறக்கூடிய பெரும்பேறு என்று தன்மையில் கூறுகிறார்.

**விருந்தோம்பல்:**

விருந்து என்றச் சொல்லுக்கு புதுமை' என்பது பொருளாகும். தொல்காப்பியரும் புதுமை, புதியவர் என்ற பொருளில் கையாண்டுள்ளார். இதனை.

'விருந்தெதிர் கோடல்

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்' (தொல்)

என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் விளக்குகின்றார். இன்று நாம் உறவினர்கள். நன்கு பழகியவர்களையே விருந்தினராக வரவேற்று உணவுப்படைக்கின்றோம். ஆனால் சங்கத்தமிழர்கள் முன்பின் அறியாதவராக இருந்தாலும். தன் வீடுத்தேடி வருபவரை வரவேற்று உபசரித்துள்ளனர் என்பதை பல்வேறு பாடல்களில் மூலம் அறிய முடிகின்றது. அன்று முதல் இன்று வரை புதிதாக வருபவர்களுக்கு உணவளித்து உபசரிக்க வேண்டிய பண்பாட்டு மரபு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

தன் இல்லத்திற்கு விருந்தினர்கள் எந்த நேரத்திற்கு வந்தாலும் சிறிதும் முகம் மாறாமல் இன்முகத்தோடு விருந்தினரை உபசரித்து மகிழ்கின்றாள். குடும்பத் தலைவியின் முதன்மைப் பண்பாக விருந்தோம்பல் இருந்ததை நற்றிணையின் கீழ்க்காணும் பாடல் விளக்குகின்றது. இதனை

'அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்

மெல்லயற் குறுமகள் உறைவின் ஊரே' (நற்.142)

என்பதன் மூலம் காணமுடிகிறது. ஆற்றுப்படை நூல்கள் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்றவர்களை தமிழ் மன்னர்கள் எவ்வாறெல்லாம் உபசரித்து விருந்தோம்பலை மேற்கொண்டனர் என்பதை சங்க இலக்கியங்கள் சிறப்பாக எடுத்தியம்புகின்றது. வள்ளுவரின் கருத்தை ஒட்டியே விவேக சிந்தாமணியிலும் விருந்தோம்பலின் சிறப்பும் விருந்தினரை உபசரிக்கும் முறையும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இதனை

'ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிர்தம் ஆகும்

முப்பழமோடு பால் அன்னம் முகம் கருத்து இடுவாராயின்
கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும் தானே' (வி.சி-4)

என்ற பாடலின் மூலம், தன்னை நாடித் தேடி வரும் விருந்தினரை உள்ளார்ந்த மனமகிழ்ச்சியோடு வந்தவரை வரவேற்று, அன்புமொழி பேசி, உப்பில்லாத கூழை உணவாகத் தந்தாலும் அது உண்பவர்க்கு அமுதம் போல் இருக்கும். இதன் மூலம் தமிழ்ச்சமுதாயம் விருந்தோம்பலுக்கு கொடுத்த முக்கியத்துவம் புலனாகின்றது.

**முடிவுரை:**

திருக்குறளில் குடும்பத்தைச் சிறப்பாக நடத்தும் மேலாண்மை நெறிகள் விரிவாக சொல்லப்பட்டுருக்கின்றன. பண்டைய தமிழ் சமூகம் அறம் செய்து பொருள் ஈட்டினர். திருமண வாழ்வை இல்லறவாழ்வு என்றனர். தாம் பெரும் செல்வங்களில் சிறந்த செல்வம், இல்லற வாழ்வில் பெரும் குழந்தை செல்வமே என்று கருதினர்.. இல்லற வாழ்க்கையில் விருந்தினரை போற்றியும், உபசரித்தும், அறநெறியுடன் விருந்தோம்பல் அளித்தனர். ஈகை மனம் கொண்டவராக, பகுத்துண்டுவராக கணவனும் மனைவியும் சிறப்புற்று வாழந்தனர். இல்லற வாழ்வில் அறத்துடன் மனித வாழ்வுக்கு தேவையான அனைத்தையும் வழங்கி, வாழ்வியல் நன்மைப் பெற வேண்டும் என்று எடுத்துக்காட்டாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.

துணைநூற்பட்டியல்:

1.அற இலக்கியக்களஞ்சியம் க.ப.அறவாணன் மணவர் மருதோன்றி அச்சகம், சென்னை. 600 001

2. பதினெண்கீழ்கணக்கு நூல்கள் மூலமும்தெளிவுரையும், அறிஞர் ச.வே.சுப்பிரமணியன். மணிவாசகர் பதிப்பகம். 31, சிங்கர் தெரு பாரிமுனை சென்னை. 600 108

3. திருக்குறள் அமைப்பும் முறையும் மு. சண்முகம்பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகம் 1972

4. எம்.ஏ.இராமசுப்பிரமணியம் (உஆ) பதினெண்கீழ்க்கணக்கு(தொகுதி 1) செல்லப்பா பதிப்பகம் மதுரை -625 001 முதல் பதிப்பு - 2009

5. எம்.ஏ.இராமசுப்பிரமணியம் (உஆ) பதினெண்கீழ்க்கணக்கு(தொகுதி 3) செல்லப்பா பதிப்பகம் மதுரை-625 001 முதல் பதிப்பு - 2009

திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால் பதிப்பாளர் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் முதல் பதிப்பு 1957